

# கிராமங்களை வலுப்படுத்தும்

# பயிர்!

மா.வினோத்குமார் 📷 ஜா.குணசேகரன்

தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியுள்ள காலை உணவுத் திட்டம் பலராலும் பாராட்டப்பட்டது. அரசாங்கம் இன்று செய்ததை 12 வருடங்களுக்கு முன்பே செயல்படுத்தி அதில் வெற்றியும் கண்டுள்ளனர் இந்த தம்பதியினர். பெரம்பலூரில் இயங்கி வரும் ‘பயிர்’ அறக்கட்டளை சுற்றுவட்டாரத்தில் உள்ள பள்ளிகளுக்கு காலை மற்றும் மதிய உணவுடன் ஊட்டச்சத்து நிறைந்த உணவு, இயற்கை விவசாயம், குறைந்த விலையில் மருத்துவம் என பல வகைகளிலும் வேலை செய்து வருகிறது. ஒரு காலத்தில் பின்தங்கிய நிலையில் இருந்த தேனூர் கிராமத்தை இன்று பயிர் அறக்கட்டளையின் செயல்பாடுகளால் முன்மாதிரியான கிராமமாக மாற்றியுள்ளனர் பிரீத்தி, செந்தில் தம்பதியினர்.

“என்னுடைய ஊர் பெரம்பலூர். ஆனால் படிச்சது திருச்சியில். என் பெற்றோர் பெரிய அளவில் படிக்கல என்பதால், என்னை படிக்க வைத்தனர்” என்று பேசத் துவங்கினார் செந்தில். “அப்பாவிற்கு புத்தகங்கள் படிப்பது பிடித்தமானது. அவரைப் பார்த்து நானும் சட்டம், வரலாறு, இலக்கியம், அரசியல், பொருளாதாரம், ஆன்மீகம், சுற்றுச்சூழல் போன்ற புத்தகங்களை பள்ளி காலங்களிலேயே படிக்க ஆரம்பிச்சேன். நான்




பிரீத்தி-செந்தில் தம்பதியினர்

படிச்சதை என் நண்பர்களுடன் விவாதிப்பேன். புத்தகங்களால் ராஜாராம் மோகன் ராய் மற்றும் காந்தி போன்றோரின் கருத்துகளால் ஈர்க்கப்பட்டேன். குறிப்பாக கிராமங்களின் வளர்ச்சிக்கும் மக்களிடையே உள்ள சமூக பாகுபாடுகளை களைய வேண்டும் என்ற எண்ணம் என் மனதில் பதிந்தது. படிச்சு பெரிய வேலைக்கு போனாலும், கடைசியில் கிராமங்களின் வளர்ச்சிக்காக பாடுபடணும்னு முடிவு செய்தேன்" என்றவர் கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு அமெரிக்காவில் வேலை பார்த்துள்ளார்.

"வெளிநாட்டில் வேலை பார்த்தாலும், என் மனம் இந்தியாவில் உள்ள கிராமங்கள் குறித்து சுழன்று கொண்டே இருக்கும். விடுமுறை நாட்களில் கிராமங்களுக்கு பயணம் செய்வேன். அவர்களின் வளர்ச்சிக்கு என்ன தேவை என்பது குறித்து ஆராய்ந்தேன். அதில் கிராமங்களின் வளர்ச்சிக்கு தடையாக இருப்பது நம்முடைய கலாச்சாரமும், சாதி போன்ற வறட்டு கவுரவம் என்று புரிந்தது. கிராம மக்கள் நகர வாழ்க்கைக்கு மாற இந்த ஏற்றத்தாழ்வுகளும் ஒரு காரணமாக இருந்தது. இதை களையக்கூடிய ஒரே கருவி கல்வி. ஆனால் கிராமங்களில் கல்வியின் தரம் மிகவும் மோசமான நிலையில் இருப்பதால், அதை மேம்படுத்தும் வேலைகளில் ஈடுபட முடிவு செய்தேன். இதனுடன் கிராமங்களின் ஆணிவேரான விவசாயத்தை வலுப்படுத்த திட்டமிட்டேன். அதற்கு ஒரு கிராமத்தை தேர்வு செய்ய நினைச்சேன். என்னுடைய சொந்த ஊரான பெரம்பலூரில் உள்ள தேனூர் கிராமம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதை அறிந்து அதனை தேர்வு செய்து, அறக்கட்டளை ஒன்றை அமைத்தேன். அப்படித்தான் 'பயிர்' வளர்ந்தது. ஒரு பயிரானது தனக்கான ஊட்டச்சத்துக்களை மண்ணில் இருந்து பெற்று வளரும். அப்படித்தான் என் அறக்கட்டளையும் வளர வேண்டும்னு நினைத்தேன். இதற்கு என் பெரியப்பா நிலம் கொடுத்து அறக்கட்டளை அமைக்க உதவினார். அமெரிக்கா வேலையை துறந்தேன். அறக்கட்டளையில் கவனம் செலுத்த ஆரம்பித்தேன்" என்றவர் அதன் வளர்ச்சியினை பற்றி விவரித்தார்.





"அறக்கட்டளைகள் பல இயங்கி வந்தாலும், பெரிய மாற்றங்களை கொண்டு வருவதில்லை. காரணம், இவை அரசுடன் இணைந்து செயல்படுவதில்லை. அதனால் நாங்க செய்யும் ஒவ்வொரு வேலைகளிலும் அரசுடன் கை கோர்த்து செயல்பட திட்டமிட்டோம். மரங்கள் நடுவது, நீர்நிலைகளை மீட்டெடுப்பது, இயற்கை விவசாயம் குறித்து விழிப்புணர்வு, பெண்களுக்கான வேலை வாய்ப்பு போன்ற வேலைகளை செய்தோம். தேனூரில் உள்ள அரசுப் பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறை இருந்ததால், ஒரு பள்ளிக்கு ஒரு ஆசிரியர் சென்று பாடங்கள் நடத்தும் திட்டத்தை அமைத்தோம். அவருக்கான ஊதியம் நாங்க வழங்குவோம். குழந்தைகளுக்கான கற்றல் ஆர்வத்தை தூண்டும் வகையில் பாடங்களை நடத்தியும் பலர் பள்ளிக்கு வருவதில்லை என்று தெரிந்தது. அதற்கான காரணம், குழந்தைகள் காலை உணவு உண்ணாமல் பள்ளிக்கு வருகிறார்கள் என்று தெரிய வந்தது. தேனூரில் உள்ள மூன்று பள்ளிகளுக்கு ஒருவரை நியமித்தோம். சாப்பாட்டிற்கான பொருட்களை வாங்கிக் கொடுப்போம், அவர் சமைத்து பரிமாறுவார். காலை உணவிற்காகவே மாணவர்கள் பள்ளிக்கு வரத் துவங்கினார்கள்'' என்றவரின் ஒவ்வொரு செயலுக்கும் உறுதியாகவும் துணையாகவும் இருக்கிறார் அவரின் மனைவி பிரீத்தி.



இவர் மருத்துவர் என்பதால்,



பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஆரோக்கியம் குறித்து தன் சேவைகளை விரிவுபடுத்தியுள்ளார். கணவன்-மனைவி இருவருக்கும் சமூகம் குறித்தான பார்வை ஒரே மாதிரியாக இருக்கவே வாழ்க்கையிலும் இருவரும் இணைந்து பயணிக்க தொடங்கியுள்ளனர். இது குறித்து பிரீத்தி, "என்னுடைய பெற்றோர் சமூக சிந்தனை கொண்டவர்கள். அவர்களை பார்த்து வளர்ந்த எனக்கும் அந்த சிந்தனை ஏற்பட்டது. டாக்டராக வேண்டும் என்பது என் கனவு. ஹோமியோபதி மருத்துவம் படிச்சேன். இலங்கை அகதிகள் முகாமில் மருத்துவ சேவை செய்தேன். என் நண்பர் ஒருவர் மூலமாக செந்தில் அறிமுகமானார். அவரும் என்னைப் போல சமூக சிந்தனை கொண்டிருந்தார். இருவரின் எண்ணமும் ஒன்றாக இருந்ததால், வாழ்க்கையிலும் இணைய விரும்பினோம். இரு வீட்டினர் சம்மதத்தோடு திருமணம் நடந்தது. எங்களின் அறக்கட்டளை இயங்கும் இடத்திலேயே இயற்கை முறையில் குடில் அமைத்து எங்களின் வாழ்க்கையை வாழ்ந்து வருகிறோம்.



நான் அறக்கட்டளையில் இணைந்தவுடன் முதலில் ஹோமியோபதி கிளினிக் ஒன்றை தொடங்கினேன். பெண்களின் நலன், அக்கறை குறித்து 'தூரிகை' பெயரில் வேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தேன். 13 பெண்களை ஒருங்கிணைத்து அவர்களுக்கு டெய்லரிங் சொல்லிக் கொடுத்து, அதன் மூலம் பைகள் தயாரித்து நண்பர்களின் உதவியுடன் விற்பனை செய்கிறோம். இதன் மூலம் பெண்களுக்கு ஒரு வருமானம் ஏற்படுத்தித் தருகிறோம். படிக்க ஆர்வமிருக்கும், ஆனால் வசதி இருக்காது. அப்படிப்பட்ட ஆதரவற்ற குழந்தைகளுக்கு அரசும், தனியாரும் இணைந்து நடத்தும் உண்டு உறைவிட பள்ளியை எங்களின் அறக்கட்டளைக்கு சொந்தமான இடத்தில் துவங்கினோம். இங்கு ஒன்றாம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை 60 குழந்தைகள் படிக்கிறார்கள். இவர்களுக்கு சிறுதானிய உணவு வழங்குவதால், காய்கறி மற்றும் சிறுதானியங்களை பயிரிட்டு வருகிறோம். அரசுப் பள்ளி மாணவர்களின் ஊட்டச்சத்து குறித்து ஆய்வு செய்ததில் குறைபாடு இருப்பதை அறிந்து, மதிய உணவுடன் இணை உணவாக கடலை மிட்டாய், எள்ளு மிட்டாய், சிறு தானிய பிஸ்கெட் வகைகளை ஆட்சியர் உதவியுடன் கொடுத்தோம். இந்த இணை உணவால், ஊட்டச்சத்து குறைபாடு இருந்த குழந்தைகள் எல்லோரும் படிப்பில் கவனம் செலுத்த ஆரம்பித்தார்கள். வளரிளம் பருவ குழந்தைகளுக்கு வேக வைத்த பயறுகள், கடலை, எள்ளு கலந்த உருண்டைகள், நெல்லிக்காயினை கொடுத்தோம். 'ஆர்வம்' என்ற பெயரில் 2 வயதிற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்காக மழலையர் பள்ளி ஒன்றையும் தொடங்கியுள்ளோம்.

கல்வி மட்டுமல்லாமல் சுற்றுச்சூழல் சார்ந்த வேலைகளையும் செய்து வருகிறோம். இதன் மூலம் தேனூரில் உள்ள 100 நீர்நிலைகளை மீட்டெடுத்திருக்கிறோம். இவை தவிர அரசுடன் இணைந்தும் பல சுற்றுச்சூழல் சார்ந்த விஷயங்களை செய்து வருகிறோம். அதில் முக்கியமானது இயற்கை விவசாயம். கடந்த வருடம் 'உழவு' என்ற பெயரில் இயற்கை விவசாயிகளை ஒருங்கிணைத்து அது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தினோம். கல்வி, ஆரோக்கியம், சுற்றுச்சூழல், விவசாயம், பெண்களுக்கான வேலை வாய்ப்புகள் அனைத்திலும் பயிர் கவனம் செலுத்தி வருகிறது. எங்களின் நோக்கம் தேனூரை முன்மாதிரியான கிராமமாக மாற்ற வேண்டும். அதனை தொடர்ந்து இந்தியாவில் உள்ள மற்ற கிராமங்களிலும் எங்களின் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும்" என்கிறார் பிரீத்தி.